செ.வெ.எண்:153 நாள்: 08.03.2018

## பத்திரிக்கை செய்தி

### திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்கொள் முதல் நிலையங்களை விவசாயிகளிடம் பணம் வசூல் செய்யக்கூடாது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆப, அவர்கள் தகவல்

திருநெல்வேலி மாவட்டத்தில் 2017-2018 பிசான பருவத்தில் விவசாயிகளிடம் குறைந்தபட்ச ஆதார விலைக்கு குறைவாக வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்வதை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் புளியரை, வடகரை, கீழபுலியூர், கோவில்குளம், கோடாரங்குளம், சிவசைலம், ஆழ்வார்குறிச்சி, கல்லிடைகுறிச்சி, வீரவநல்லூர், காருகுறிச்சி, சிவகிரி, சேரன்மகாதேவி, மேலச்செவல், ரவணசமுத்திரம், வடக்கு அரியநாயகிபுரம், முன்னீர்பள்ளம், சுத்தமல்லி, மூளிகுளம், நடுவகுறிச்சி, குன்னத்தூர், மானூர், களக்காடு, திருக்குறுங்குடி ஆகிய கிராமங்களில் நெல் கொள்முதல் மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி நெல் கொள் முதல் நிலையங்களில் விவசாயிகள் தாங்கள் கொண்டு வரும் நெல் மூட்டைகளுக்கு பணம் ஏதும் வழங்க வேண்டாம். அவ்வாறு நெல் கொண்டு வரும் விவசாயிகளிடம் எவரும் பணம் வசூலித்தால் அதன் விபரத்தை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவும் திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி

.